# திருமங்கலம் நகராட்சி

## மன்றப் பொருள்

**1)** நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைக்கடிதம் ந.க.எண். **19009/2022**/SBM-1 நாள்.**25.11.2022**ல் இந்நகராட்சிக்கான கரிசல்பட்டி உரக்கிடங்கில் Swachh Bharat Mission (Urban 2.0) திட்டத்தின் கீழ் **12,284** கனமீட்டர் தேக்க கழிவுகளை ரூ.**77.00** இலட்சம் (GOI – 50% + GOT – 33% + ULB Share – 17%) மதிப்பீட்டில் Biomining முறையில் தேக்க கழிவுகளை அகற்றுவதற்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இத்திட்டப்பணியினை மேற்கொள்வதற்கு இந்நகராட்சியின் பஙகளிப்புத்தொகையாக ரூ.**13.09** இலட்சம் (**17**சதவிகிதம்) நகராட்சி வருவாய் நிதியில் இருந்து ஈடு செய்து கொள்வதற்கும் நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்ப்பட்டது. (நகர்மன்றத்தீர்மானம்எண்.**167**, நாள். **12.01.2023**ல் தீர்மானம் அனுமதிக்கப்பட்டது). இப்பணிக்கு மண்டல செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், மதுரை அவர்களின் செயல்முறைக்கடிதம் ந.க.எண். **6189/2022**/பி2, நாள்.**24.12.2022**ல் தொழில்நுட்ப அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து மேற்காணும் பணிக்கு 06.01.2023-ந் தேதியில் இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளி முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் Online மூலம் Dhanshith Trading Agencies திருச்சிராப்பள்ளி, மற்றும் Ourland Engineering works pvt Limited சென்னை ஒப்பந்ததாரரிடம் இருந்து மட்டுமே ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிக்கு தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி (Technical Bid) திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில் தகுதிகாண் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நிறைவு செய்வதால் மேற்படியாரின் விலை விகித ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) 12.01.2023-ல் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது. விபரம் பின்வருமாறு.

| ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில்கொடுக்கப்பட்ட விலைவிகிதம் |
|---|---|
| Dhanshith Trading Agencies<br>திருச்சிராப்பள்ளி | மதிப்பீட்டினைக்காட்டிலும்<br>17.87% அதிகம் |
| Ourland Engineering works pvt Limited<br>சென்னை | மதிப்பீட்டினைக்காட்டிலும்<br>32.56% அதிகம் |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளியிலும் மதிப்பீட்டினைக் காட்டிலும் கூடுதல் விலை விகிதம் வழஙகப்பட்டு உள்ள நிலையில் இவ்விரண்டில் குறைவானதும் மதிப்பீட்டினைக் காட்டிலும் 17.87 சதவீதம் கூடுதல் விலைவிகிதம் வழஙககியுள்ள Dhanshith Trading Agencies, திருச்சிராப்பள்ளி நிறுவனத்தின் கூடுதல் விலை விகிதத்தினை மதிப்பீட்டு விலையை விட குறைத்து தரக்கோரி சம்மதக்கடிதம் (Consent Letter) கோரியதில் மேற்படியார் தனது 23.01.2023ம் தேதிய கடிதத்தில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.02% குறைவாக பணி செய்து தருவதற்கு சம்மதக்கடிதம் அளித்துள்ளார்.

எனவே, Dhanshith Trading Agencies, திருச்சிராப்பள்ளி நிறுவனத்தின் மூலம் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொண்டு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1220/2022/இ1

**தீர்மானம் எண்.230: அனுமதிக்கப்பட்டது.**

2)திருமங்கலம் நகராட்சிப் பகுதிகளில் உள்ள 14 எண்ணிக்கை குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் இருந்து சுமார் 95 எண்ணிக்கை உள்ள குடிநீர் வால்வுகள் இயக்கப்பட்டு இதன் மூலம் இந்நகர்ப்பகுதிக்கு தினசரி குடிநீர் விநியோகம் செய்தல், குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை பாதுகாத்தல் மற்றும் சுத்தம் செய்தல் பணி மேற்கொள்ளுதல், மற்றும் சோழவந்தான் தலைமை குடிநீர் நீரேற்று நிலையத்தில் மின்மோட்டர் இயக்குவதற்கான பணி மேற்கொள்ளுதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு இந்நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் 01.06.2022 முதல் 31.05.2023 வரை ஓராண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் அமர்த்தி பணி மேற்கொள்வதற்கும் இப்பணிக்கான மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கும் இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 48 , நாள்.27.06.2022ல் அனுமதிக்கப்பட்டது. இப்பணிக்கு 01.06.2022ல் ஸ்ரீ சாய் பில்டர்ஸ், திருமங்கலம் ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழஙகி பணி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் மேற்காணும் தீர்மானத்தில் ஓராண்டிற்கு பணி மேற்கொள்ள அனுமதி வழஙகப்பட்ட நிலையில் ஏழு மாத காலஙகளில் (01.06.2022 முதல் டிசம்பர் 2022 வரை) ரூ.9.04 இலட்சம் செலவினம் ஏற்பட்டுள்ளது. மீதமுள்ள ஐந்து மாதஙகளுக்கு (ஜனவரி 2023 முதல் மே 2023 வரை) 3 எண்ணம் Turncock, 2 எண்ணம் Mazdoor II class மற்றும் 2 எண்ணம் Electrical Helper பணி மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளதால் இதற்கான கூடுதல் செலவினம் ரூ.6.50 இலட்சம் ஆகும்.

மேற்காணும் குடிநீர் விநியோகப்பணி அத்தியாவசியப்பணியாக இருப்பதால் கூடுதல் செலவினம் ரூ.6.50 இலட்சத்திற்கும் பணியினை தற்போது மேற்கொண்டு வரும் ஸ்ரீ சாய் பில்டர்ஸ், திருமஙகலம் ஒப்பந்ததாரர் மூலம் ஏற்கெனவே வழஙகப்பட்ட வேலை உத்தரவில் குறிப்பிட்டுள்ள விலைவிகிதத்தில் பணி மேற்கொள்ளவும், இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் வழஙகல் நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அஙகீகரிக்கலாம்.

**ந.க.எண். 674/2022/இ1**

**தீர்மானம் எண்.231: அனுமதிக்கப்பட்டது.**

3)நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை அரசாணை (MS) No. 7 நாள்.20.01.2023ல் அம்ருட்–2.0 2022–23 திட்டத்தின் கீழ் இந்நகர்ப்பகுதியில் 2 எண்ணிக்கை பூங்கா மேம்பாட்டு பணி மற்றும் 1 எண்ணிக்கை கண்மாய் புணரமைத்தல் பணியினை மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.26467/2021/அம்ருட்–1, நாள்.31.01.2023ம் தேதிய கடிதத்தில் இப்பணியினை உரிய வழிமுறைகளின் படி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன் படி கீழ்க்கண்டவாறு இந்நகர்ப்பகுதியில் உள்ள பூஙகா மற்றும் கண்மாய் மேம்பாட்டு பணிகளை அரசாணையில் வழஙகப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டின் படி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | பணியின் விவரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | நிதி ஒதுக்கீடு விவரம் | | |
|---|---|---|---|---|---|
| | | | GOI | GOTN | ULB |
| 1 | வார்டு எண்–27 கற்பக நகரில் உள்ள நகராட்சி பூஙகா மேம்பாட்டு பணி (SF No. 280/1B, 1B2, Block – C) | 20.00 | 7.00 | 6.00 | 7.00 |
| 2 | வார்டு எண்–26 கிறிஸ்டியன் காலணியில் உள்ள நகராட்சி பூஙகா மேம்பாட்டு பணி (SF No. 286, Block – C) | 26.00 | 7.00 | 8.00 | 11.00 |
| 3 | வார்டு எண்–15 ஆனைப்பாப்பன்குளம் கண்மாய் புணரமைத்தல் பணி (TS No. 3/2) | 39.00 | 20.00 | 12.00 | 7.00 |
| | **மொத்தம்** | **85.00** | **34.00** | **26.00** | **25.00** |

**அ.கு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அஙகீகரிக்கலாம்.

**ந.க.எண். 316/2023/இ1**

**தீர்மானம் எண்.232:** **அனுமதிக்கப்பட்டது.**

4)நகராட்சி பகுதிகளில் புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழஙகுவதில் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 748/2008/குவ2, நாள். 21.09.2009–ன் பிரகாரம் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சாலை பராமரிப்பு கட்டணத்தில் ஒவ்வொரு வருடமும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகை முந்தைய ஆண்டின் கட்டணத்தில் 5 சதவீதம் உயர்த்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகர்மன்ற தீர்மானம் எண். 2407, நாள். 28.02.2022–ன் பிரகாரம் 2022–23–ம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட விபரப்படி தொகை நிர்ணயம் செய்யப்பட்டது.

| | கருங்கல் சல்லி சாலை | தார்சாலை | சிமெண்ட் சாலை |
|---|---|---|---|
| 0–30 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 2040/– | ரூ. 4300/– | ரூ. 4960/– |
| 30–90 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 3360/– | ரூ. 5440/– | ரூ. 6080/– |

தற்பொழுது 2023–24–ம் ஆண்டிற்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட தொகையிலிருந்து 5 சதவீதம் உயர்த்தி கீழ்க்கண்டவாறு திருத்திய தொகையினை நிர்ணயம் செய்திடவும், மேலும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை வசூல் செய்யவும் மேலே கூறப்பட்ட சுற்றறிக்கையின்படி புதிய இணைப்புகள் வழஙகவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | கருங்கல் சல்லி சாலை | தார்சாலை | சிமெண்ட் சாலை |
|---|---|---|---|
| 0–30 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 2150/– | ரூ. 4520/– | ரூ. 5210/– |
| 30–90 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 3530/– | ரூ. 5720/– | ரூ. 6390/– |

**அ.கு:** அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.** 2346/2012/இ1

**தீர்மானம் எண்.233:** **அனுமதிக்கப்பட்டது.**

5)திருமஙகலம் நகராட்சி உசிலை சாலை புல்பேட்டை வளாகத்தில் கற்றல்மையம் ரூ.188.00 இலட்சம் மதிப்பீட்டில் கற்றல்மையம் கடடும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணிக்கான தொழில்நுட்ப அனுமதியில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனையில் நகர் ஊரமைப்பு துறையில் கட்டிடத்திற்கான வரைபட வடிவமைப்பு அனுமதி பெற அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி பணி நடைபெற்று வரும் கற்றல்மைய கட்டிடத்தினை அளவீடு செய்து அதற்கேற்ப வரைபடம் தயார் செய்து இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை மதுரை அலுவலகத்திற்கு சமர்பிப்பதற்கு தனியார் கலந்தாலோசகர் ஸ்ரீ மீனாட்சி அசோசியேட்ஸ் மதுரை நிறுவனத்திற்கு கட்டணத்தொகையாக ரூ.18500/– செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது,

**அ.கு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று தொகை செலவிடப்பட்டதை மன்றம் அஙகீகரிக்கலாம்.

**ந.க.எண். 677/2022/இ1**

**தீர்மானம் எண்.234:** **அனுமதிக்கப்பட்டது.**

**6)**திருமங்கலம் நகராட்சி தென்பகுதியில் மட்டும் **1962**ம் ஆண்டு பேரூராட்சி காலத்தில் பாதாளசாக்கடை திட்டம் செயல்படுத்தப்பட்டதில் தற்போதைய நகரின் மொத்த வீடுகளில் மூன்றில் ஒரு பஙகு வீடுகள் அமையப்பெற்றுள்ள தென்பகுதியில் உள்ள வீடுகளுக்கான கழிவுநீர் பாதாளசாக்கடை கட்டமைப்பு மூலம் தெற்குதெரு நகராட்சி கழிவுநீரேற்று நிலையத்திற்கு வரப்பெற்று அஙகிருந்து வடகரை கினியா புல்பண்ணைக்கு சுத்திகரிக்கப்படாமல் கழிவுநீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது. பாதாள சாக்கடை இணைப்பு உள்ள வீடுகளுக்கு கட்டணம் ஏதும் வசூலிக்கப்படாத நிலையில் நகரின் தென்பகுதியில் பாதாள சாக்கடை இணைப்பு உள்ள வீடுகளுக்கு மாதாந்திர கட்டணம் வசூல் செய்வதற்கு கடந்த **01.07.2018**ம் நாள் முதல் பாதாளசாக்கடை இணைப்பிற்கான துணைவிதி அமல்படுத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து பாதாள சாக்கடை இணைப்பு உள்ள வீடுகளுக்கு இந்நகராட்சி வருவாய் உதவியாளர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கணினியில் மாதாந்திர கேட்பு எழுப்பப்பட்டது. இதில் ஒரு சில பொதுமக்களிடமிருந்து தஙகளது வீட்டிற்கு பாதாள சாக்கடை இணைப்பு இல்லை என அவ்வப்போது மனுக்கள் வரப்பெற்றதால் இவ்வலுவலக பொறியியல் பிரிவு பணியாளர்கள் மீண்டும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பாதாள சாக்கடை இணைப்பு இல்லாத வீடுகளுக்கு கேட்பு எழுப்பப்பட்டுள்ளதனை நீக்கம் செய்யவும், மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு உள்ள வீடுகளுக்கு கேட்பு எழுப்பிடவும் மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

மன்றம் பார்வைளியட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண். 1709/2022/இ1**

**தீர்மானம் எண்.235: பதிவு செய்யப்பட்டது.**

**7)**திருமங்கலம் நகராட்சி வார்டு எண்–**26** ஆறுமுகம் தெற்கு தெரு–**6**ல் உள்ள ஓடையில் பக்கசுவர் இல்லாத காரணத்தால் அதன் அருகில் உள்ள சாலையில் செல்லும் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதால் அவ்விடத்தில் தடுப்புசுவர் கட்டவேண்டியது அவசியமாகிறது. மேலும் ஆறுமுகம் தெற்கு **1**வது தெருவில் பழுதடைந்த நிலையில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் சாலையினை சரிசெய்வது அவசியமாகிறது. இதன் பொருட்டு தடுப்பு சுவர் கட்டுதல், மழைநீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் சாலையினை சீரமைத்தல் பணியினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.**2.25** இலட்சம் ஆகும். இப்பணியினை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

**1.** மன்றம் அனுமதிக்கலாம்.

**2.**பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அஙகீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.236: அனுமதிக்கப்பட்டது.**

**8)**திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பொது சுகாதாரப் பிரிவில் உள்ள குப்பைகளை சேகரிக்க பயன்படுத்தப்படும் பேட்டரி வாகனங்களில் தற்போது **9** வாகனங்கள் பேட்டரி பழுது ஏற்பட்டும் மற்றும் இதர பழுதுகள் ஏற்பட்டும் இயங்காத நிலையில் உள்ளதால் மேற்படி வாகனங்களை பொது சுகாதார அவசர அவசியம் கருதி பழுது நீக்கம் செய்ய வேண்டிய நிலை உள்ளது. எனவே உரிய விலைப்புள்ளிகள் பெற்று பேட்டரி வாகனங்களை பழுது நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

**அ.கு**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி குப்பைகளை அகற்ற பயன்படுத்தப்படும் பேட்டரி வாகனங்கள் **9** எண்ணம் பழுது ஏற்பட்டுள்ளதை பழுது நீக்கம் செய்யவும் உரிய விலைப்புள்ளிகள் பெற்று பணி உத்தரவு வழஙகவும் மன்றம் அனுமதிக்கலாம். உத்தேச செலவு ரூ.**5.00** இலட்சம்.

ந.க.எண்.**2281/2022**/அ2

**தீர்மானம் எண்.237: அனுமதிக்கப்பட்டது.**

**9)**திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பொது சுகாதாரப் பிரிவில் உள்ள குப்பைகளை சேகரிக்க பயன்படுத்தப்படும் TN-58-AD-8795 வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறும்பொருட்டு வாகனம் கீழ்க்கண்டுள்ள பழுதுநீக்கம் செய்ய வேண்டியுள்ளது. தகுதிச்சான்று பெறும்பொருட்டு அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் பெற்று பழுது நீக்கம் செய்து தகுதிச்சான்று பெற மன்றத்தின் அனுமதிக்கு.

**1)**ஆயில் சர்வீஸ், இஞ்சின் ஆயில், கிரவுன் பாக்ஸ் ஆயில் மாற்றம் செய்தல், கிளச் பிளேட், நான்கு வீல் கிரீஸ் செய்தல், பிரேக் லைனிங், டிங்கர் வேலைகள், செல்ப் மோட்டார் டைனமோ, ரேடியேட்டர் வேலை, ஸ்பிரிங் பிளேட் மற்றும் பெயிண்டிங் வேலைகள்.

**அ.கு**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி குப்பைகளை அகற்ற பயன்படுத்தப்படும் பொது சுகாதார வாகனத்தை தகுதிச்சான்று பெறும்பொருட்டு அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். உத்தேச செலவு ரூ.**1.00** இலட்சம்.

ந.க.எண்.**137/2023**/அ2

**தீர்மானம் எண்.238: அனுமதிக்கப்பட்டது.**

**10)**திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பொது சுகாதாரப் பிரிவில் உள்ள குப்பைகளை சேகரிக்க பயன்படுத்தப்படும் TN-58-AD-8699 வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறும்பொருட்டு வாகனம் கீழ்க்கண்டுள்ள பழுதுநீக்கம் செய்ய வேண்டியுள்ளது. தகுதிச்சான்று பெறும்பொருட்டு அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் பெற்று பழுது நீக்கம் செய்து தகுதிச்சான்று பெற மன்றத்தின் அனுமதிக்கு.

**1)**ஆயில் சர்வீஸ், இஞ்சின் ஆயில், கிரவுன் பாக்ஸ் ஆயில் மாற்றம் செய்தல், கிளச் பிளேட், நான்கு வீல் கிரீஸ் செய்தல், டிங்கர் வேலைகள், இன்ஜின் பெட், கியர்பாக்ஸ் பெட் மற்றும் பெயிண்டிங் வேலைகள்.

**அ.கு**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி குப்பைகளை அகற்ற பயன்படுத்தப்படும் பொது சுகாதார வாகனத்தை தகுதிச்சான்று பெறும்பொருட்டு அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். உத்தேச செலவு ரூ.**0.90** இலட்சம்.

ந.க.எண்.**136/2023**/அ2

**தீர்மானம் எண்.239: அனுமதிக்கப்பட்டது.**

**11)**திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட நவீன மின்மயானத்தை **01.01.2023** முதல் பராமரிக்க அனுமதி கோரி வரப்பெற்ற INDIAN HUMAN WELFARE TRUST, திருமங்கலம் என்ற நிறுவனத்தின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு**

மேற்படி நிறுவனம் பதிவு பெற்ற நிறுவனமாக உள்ளதாலும், ஏற்கனவே பராமரித்து வந்த நிறுவனம் அதிக கட்டணம் வசூலிப்பதாக தெரியவந்த காரணத்தால் மேற்படி INDIAN HUMAN WELFARE TRUST, திருமங்கலம் என்ற நிறுவனத்தை பராமரிக்க அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2019/2022/அ2

**தீர்மானம் எண்.240: அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**12)** திருமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவின் குப்பைகள் அள்ள பயன்படுத்தப்படும் பேட்டரி வாகனங்கள் பழுதுநீக்கம் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு.

| | | |
|---|---|---|
| 1)Pentam Precision Fabricators Pvt. Ltd., Madurai | - | Rs.58100 |
| 2)AAJ Solution, Tirunelveli | - | Rs.51700 |

அ.கு

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள AAJ Solution, Tirunelveli அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம். அவசர அவசியம் கருதி பொது சுகாதாரப் பணிக்கு வாகனம் தேவைப்படுவதால் நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் உரிய தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2281/2022/அ2.

**தீர்மானம் எண்.241: அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**13)**அரசாணை (நிலை) எண்.**164**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (கு.வ2) துறை நாள்.**11.08.2010**ல் ரூ.**784.00** கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் காவேரி கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் திருமங்கலம் நகராட்சி விகிதாச்சாரத் தொகை ரூ.**68.13** கோடி ஆகும். இத்திட்டத்திற்கான திட்ட மதிப்பீட்டின் சேமிப்பு நிதியில் இருந்து இந்நகர்ப்பகுதியில் ரூ.**194.00** இலட்சம் மதிப்பீட்டில் மூன்று இடங்களில் **1.00** இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கதொட்டி குடிநீர் வடிகால் வாரியத்தால் இந்நகராட்சிக்கு கட்டி தருவதற்கு உரிய அனுமதி பெறப்பட்டு முதற்கட்டமாக ரூ.**152.96** இலட்சம் இந்நகராட்சியால் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. மீதத்தொகை செலுத்தும் பட்சத்திலே பணி செயல்படுத்தி தர இயலும் என தெரிவித்து இந்நாள் வரை குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கதொட்டி கட்டுவதற்கான பணி செயல்படுத்தப்படாமல் உள்ளது. இப்பொருள் குறித்து குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்களுடன் நகர்மன்றத்தலைவர் அவர்களால் ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டு முடிவு எடுக்கப்பட்டதில் இந்நகராட்சிக்கான தற்போதைய விரிவாக்க பகுதிகளான புதிய வார்டு எண்.**27** கற்பகநகர் மற்றும் புதிய வார்டு எண்–**5** முகமதுஷாபுரம் தெரு–**4**ல் இந்நகராட்சியால் செலுத்தப்பட்ட ரூ.**152.96** இலட்சம் மதிப்பீட்டில் **3.00** இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு எண்ணிக்கை குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கதொட்டி கட்டி தருவதற்கு குடிநீர் வடிகால் வாரியத்தால் சம்மதிக்கப்பட்டுள்ளது. எனவே காவேரி கூட்டு குடிநீர் திட்டமதிப்பீட்டில் சேமிப்பு நிதியில் இருந்து இந்நகராட்சியால் செலுத்தப்பட்ட ரூ.**152.96** இலட்சம் தொகையை இந்நகர்ப்பகுதிக்கு **3.00** இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு எண்ணிக்கை குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கதொட்டிகள் மற்றும் பகிர்மான குழாய்கள் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் அமைப்பதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 322/2008/இ1**

**தீர்மானம் எண்.242: அனுமதிக்கப்பட்டது.**

**14)**நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைக்கடிதம் ந.க.எண். **19009/2022**/SBM-1 நாள்.**25.11.2022** இந்நகராட்சிக்கான கரிசல்பட்டி உரக்கிடங்கில் Swachh Bharat Mission (Urban 2.0) திட்டத்தின் கீழ் **12,284** கனமீட்டர் தேக்க கழிவுகளை ரூ.**77.00** இலட்சம் மதிப்பீட்டில் Biomining முறையில் தேக்க கழிவுகளை அகற்றுவதற்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டு உரிய முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இப்பணிக்கு **06.02.2023**ம் தேதி தன்ஷித் டிரேடிங ஏஜென்ஸிஸ், திருச்சிராப்பள்ளி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழஙகப்பட்டுள்ளது. இப்பணிக்கு திட்ட மேலாண்மை கலந்தாலோசகராக சுற்றுச்சூழல் கல்விமையம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை அவர்களை நியமிக்கப்பட்டுள்ளது. இக்கலந்தாலோகர் பணியினை மேற்கொள்வதற்கு இயக்குநர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை அவர்களின் Lr.No.1256/CES/SKI/THIRUMANGALAM/2022 நாள்.**20.02.2023**ல் கலந்தாலோசகர் கட்டணமாக ரூ.**3,54,000/–** செலுத்த கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. இத்தொகையினை அண்ணா பல்கலைக்கழகம், சென்னைக்கு செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அ.கு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1220/2022/இ1**

**தீர்மானம் எண்.243: அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்)எம்.ரம்யா,**
நகர்மன்றத் தலைவர்,
திருமஙகலம் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
திருமஙகலம் நகராட்சி.